1984 மார்ச் 14]

மரபுவழி மருத்துவர்கள்.

*94. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 31—8—1983 முடிய இந்திய மருத்துவ மத்திய கழகத்தில் பதிவு செய்து கொண்டுள்ள மரபுவழி மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அவர்களின் திறனை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 31—8—1983 முடிய தமிழ் நாடு இந்திய மருத்துவ மத்திய கழகத்தில் 11,702 மரபுவழி மருத்துவர்கள் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

(இ) பெரும்பாலும் பி. 2 வகை (மரபுவழி/பாரம்பரை) மருத்துவர்கள் சொந்தமாக இந்திய மருத்துவ தொழில் செய்பவராவர். இவர்கள் ஊராட்சி, கிராம மருந்தகங்களில் மருத்துவர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள். மேலும் அரசாங்க மருந்தகங்களுக்கு 'ஏ' வகுப்பு மருத்துவர்கள் கிடைக்காததினால் அம்மருந்தகங்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்ற பி. 2 பதிவு மருத்துவர்களை (மரபுவழி/பாரம்பரை) ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களாக நியமனம் செய்யலாமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. மு. மாசிலாமணி : தலைவர் அவர்களே, மரபு வழி மருத்துவர்கள் என்று சொல்லும்போது, பரம்பரை குலத் தொழிலாகச் செய்து வருகின்ற நாவித சமுதாயத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் இதிலே உள்ளடங்கி இருக்கின்றார்களா ? ஆம் எனில், அதிலே எத்தனை பேர்கள் இருக்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அவர்களும் இதில் உள்ளடங்கி இருக்கிறார்கள். ஆனால் எத்தனை பேர்கள் என்று சொல்லவில்லை. இன்றைக்கு ஒட்டுமொத்தமாக, 'தமிழ் நாடு போர்ட் ஆஃப் இந்தியன் மெடிசன்ஸ்' என்று இருப்பதில், அவர்கள் பி 2 கிளாஸ், பிராக்டிஷனர்ஸ், டிரடிஷனலி டிரெயிண்ட், ஹெரிடிடரி பிராக்டிஷனஸ் 31—3—1983-ல், சித்தா பொறுத்தவரையில், பி கிளாஸ் 8,097, சி கிளாஸ் 219, ஆயுர்வேதா பி கிளாஸ் 1,899, சி கிளாஸ் 55, யுனானி பி 2 கிளாஸ் 628, சி கிளாஸ் 4.

திரு. மு. மாசிலாமணி : தலைவர் அவர்களே, அந்த மருத்துவர்களி னுடைய எண்ணிக்கையில் தாய்க் குலத்தைச் சேர்ந்தவர்கள், பெண்கள் உள்ளனரா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

THIRU J. M. MIAKHAN: May I know from the Hon. Minister whether there are any new entrants, whether in addition to the traditionally trained hereditary Vaids, there is any new person entering the profession and whether there is any entrance examination to see whether they are qualified for this job ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அவர் களுக்கு நாம் தேர்வு வைக்கின்றோம். அவர்களுக்காக என்று ஒரு சட்டத்தை கொண்டு வந்தோம். அதிலே கொஞ்சம் வேதனைக்குரிய நிலைமை என்ன வென்றால், இங்கே நாம் 1983 ஆம் ஆண்டு, அந்தச் சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினோம். ஆனால் இன்னும் அதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்காமல் இருக்கிறது. 'பிரசிடென்ட்ஸ் அசென்ட்' தராமல் வைக்கப்பட்டிருக்கின்றது. அதில் வெவ்வேறு கேள்விகள் எழுப்பப்பட் டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தினுடைய இரண்டு சட்ட மன்றங்களும் இந்த மசோதாவை நிறைவேற்றி, அதைச் சட்டமாக்க வேண்டும் என்று அனுப்பியிருக்கின்ற ஒன்றில், சில கேள்விகளை எழுப்பி, அதற்கு 'பிரசிடென் ட்ஸ் அசென்ட்' கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே அதிலே இன்னும் வேகமாக முன்னேற முடியவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த எண்ணிக்கையில் பெண்களும் அடங்கும் என்று சொன்னார்கள். பெண்களின் எண்ணிக்கையைச் சொல்ல முடியுமா ? பெண் மருத்துவர் களுக்கு முன்னுரிமை கொடுக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பெண் மருத்துவர்கள் எவ்வளவு என்ற குறிப்பு என்னிடம் இல்லை. பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : மரபு வழி மருத்துவர்கள் எண்ணிக்கை தமிழகத்தில்தான் அதிகமாக இருக்கும் என்று தெரிகிறது. இவர்கள் வேலை வாய்ப்புகள் பெறுமளவிற்கு பயிற்சி வகுப்பு நடத்துகிற எண்ணம் அரசுக்கு உண்டா ? பயிற்சிக் கல்லூரிகளில் நற்சான்றிதழ் வழங்கி அதன்மூலம் இவர்கள் தொழில் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்து தருமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 14]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதே கேள்வியைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் கேட்டார். பயிற்சி தரப்படும். பிறகு அவர்கள் வேலையில் அமர்த்தப்படுவர். கன்சாலிடேடட்டாக மாதம் ஒன்றுக்கு ரூ. 240 கொடுக்கப்படும். இவ்வாறு முதன்முதலாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுதான் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து வருகிறது. இதுவரை அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படவில்லை. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், இதைப் பார்த்துச் சில இடங்கள் காலியாக இருக்கின்றன. அதிலே 'ஏ' கிளாஸ் டாக்டர்கள் வரவில்லை. ஆகவே காலியாக இருக்க வேண்டியதில்லை. மரபு வழி பயிற்சி மருத்துவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். திட்டவட்டமாக அவர்கள் உத்தரவு போட்டுத்தான் இந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றி வருகிறோம். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

கால்நடை மருத்துவமனை, பின்னலூர்.

*95. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) : **மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—**

(அ) சிதம்பரம் வட்டம், பின்னலூர் கிராமத்திலிருக்கும் கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் பழுதடைந்துள்ளதால், அதனை உடனடியாகப் பழுது பார்ப்பதோடு, போதுமான கட்டிட வசதியும் செய்து தர வேண்டும் என்று 26—5—1982-ல் அந்த ஊர் கிராம மக்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) சிதம்பரம் வட்டம், பின்னலூர் கிராம மக்களிடமிருந்து 26—5—1982 நாளிட்ட கடிதம் ஏதும் பெறப்படவில்லை. ஆனால் 23—2—1982-ல் அரசுக்கு ஒரு கோரிக்கை வந்தது. அதில் அக்கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவமனையை பழுது பார்த்து மீண்டும் செயல்பட வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நேரத்தில், கால்நடை மருத்துவமனை கட்டிடம் பழுது பார்க்கும் வரையில், பின்னலூர் தாய்சேய் நல விடுதி (அல்லது) துணை சுகாதார நிலையம் இரண்டில் ஏதாவது ஒன்றில் இயங்கிச் செயல்புரிய ஆவன செய்யுமாறு கோரப்பட்டது.